# சங்க இலக்கியத்தில் இசையும் உயிரினத் தொடர்பும்

**ஆ. கார்த்திக்**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*கேஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*கோவை*

## முன்னுரை

பழந்தமிழ் இசை என்பது தமிழரின் மரபுவழியான மிகப்பழமையான இசைச் செல்வமாகும். இசை என்பது ஒழுங்கு செய்யப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட அழகு ஒலியாகும். இசையை வடமொழியில் நாதம் என அழைப்பர். இசை என்ற சொல்லுக்கு இசைய வைப்பது என்று பொருள். மனிதனையும் மற்ற உயிர்களையும் இசைய வைக்கின்ற பணிய வைக்கின்ற ஓர் அருஞ்சாதனம் இசை. இசைக்குள் எல்லா உயிர்களும் அடங்கும். இன்றைய உலகில் இசை ஒரு மருத்துவமாகவே விளங்குகிறது. இசையால் இரத்த அழுத்தம் முதல் நரம்பியல் தொடர்பான நோய்கள் கூட குணமாகின்றன என்று இன்றைய அறிவியல் உரைக்கிறது. நியூரான்களின் தொகுப்பே மூளை. இசையால் உண்டாகும் மின்னலைகள் உடலில் உள்ள உயிர்வேதி மின்னலைகளுடன் ஒத்துப்போகின்றன. அதனால் உடலில் பல மாற்றங்கள் உருவாகின்றன. இந்த மாற்றத்தையே நாம் இசை என்கிறோம். இன்றைய காலக்கட்டங்களிலும் வாத்தியக் கருவிகள் மூலம் இசைக்கும் போது அலங்கரிக்கப்பட்ட குதிரைகள் திருமண வீடுகளில் நடனமாடுவதையும், மகுடி இசைக்கு காது கேளாத பாம்பு கூட தலையசைத்து ஆடுவதையும், இசைகேட்டு மனிதன் தன் உணர்ச்சிகளை அடக்க முடியாமல் ஆடுவதையும் (சாமியாடுதல்) கண்கூடாகக் காணமுடிகிறது. இவ்வாறாக இசைக்கும் உயிரினங்களுக்கும் உள்ள தொடர்பை விளக்குவதாக இக்கட்டுரை அமைவதனை ஒருசில சங்கப் பாடல்கள் மூலம் அறியலாம்.

## சங்க கால இசைக்கருவிகள்

சங்க கால மக்கள் இசைத்துறையில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தனர். குறிஞ்சிப்பண், பாலைப்பண், மருதப்பண், படுமலைப்பண், விளரிப்பண், காமரப்பண், ஆம்பல்பண் எனப் பல்வேறு பண்களையும் காலை, மாலை எனப் பொழுதறிந்து இசைத்து மகிழ்ந்தனர். நரம்பு, துளை, தோல், கஞ்சம் என நான்கு வகையான இசைக்கருவிகளோடு குரலாலும் இசைத்து மகிழ்ந்தனர்.

## இசைக்கு மயங்கும் உயிர்கள்

சங்க இலக்கியங்களின் வழி புள்ளினங்கள், விலங்கினங்கள் இசைக்கு மயங்கிய தன்மைகளையும் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். எட்டுத்தொகையில் ஒன்றான கலித்தொகையில் யானை யாழோசைக்குக் கட்டுப்படுவதை,

**காழ்வரை நில்லாக் கடுங்களிற்று**
**ஒருத்தல் யாழ்வரைத் தாங்கியாங்கு (கலி-2-26-27)**

என்ற பாடல் வழி அறியமுடிகிறது. யானைப்பாகனின் குத்துக்கோலுக்கு அடங்காத யானைகூட யாழின் இனிமையான இசைக்கு மயங்கியமை புலப்படுத்தப்படுகிறது. மலைச்சாரலின் பகுதியில் தினைப்பயிரைத் திண்ண ஒரு காட்டு யானை அங்கு வந்தது. அங்குள்ள குறத்தி அழகான குறிஞ்சிப்பண்ணைப் பாடினாள். அதைக் கேட்டு மெய்மறந்து நின்ற யானை பயிரைச்சாப்பிட மறந்ததாம். அதனை,

**ஒலியல் வார் அயிர் உளரினள் கொடிச்சி**
**பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்**
**குரலும் கொள்ளாது நிலையிலும் பெயராது**
**படாஅப் பைங்கண் பாடுபெற்று ஓய்யென**
**மறம்புகல் மழகளிறு உறங்கும் (அகம்.102)**

என்ற பாடல்வழி அறியலாம்.

செந்நாய்க்கு அஞ்சிய கலைமான் இன்னிசை கேட்டு அச்சம் நீங்கியதை அகநானூற்றில்,

**செந்நாய் வெரீ, புகா்உழை ஒருத்தல்**
**போரி அரை விளவின் புண்புற விளை பூசல்**
**ஆழல் எறிகோடை தூக்களின் கோவலா்**
**குழல் என நினையும் நீா்இல் நீா்இடை**

என்ற பாடலில் செந்நாய்க்கு அஞ்சிய கலைமான் விளாம்பழ ஓட்டின் துளை வழியே வரும் வெப்பமான காற்று இனிய ஓசையோடு வருவதைக் கேட்கிறது. அவ்வோசை கோவலரின் குழலோசை என்றே கருதுகிறது. அதனால் அச்சம் நீங்குகிறது என்பதை அகநானூற்றில் கயமனார் சிறப்பாக எடுத்துரைப்பார்.

குறுந்தொகையில் இசையின் இனிமையில் மயங்கிய கிளிகளைப் பற்றி இப்பாடல் சுட்டுகிறது.

**சுடுபுன மருங்கில் கலித்த ஏனற்**
**படுகிளி கடியும் கொடிச்சி கைக்குளிரே**
**இசையின் இசையா இன்பாணித்தே**
**கிளி அவள்விளி என விழல் ஓவாவே**
**அது புலந்து அழுத கண்ணே சாரல்**
**குண்டு நீா்ப் பைஞ் சுனைப் பூத்த குவளை**
**வண்டு பயில் பல் இதழ் கலை,**
**தண் துளிக்கு ஏற்ற மலா் போன்றவ்வே" (குறிஞ்சி-291)**

என்ற பாடலில் தினைகளில் வழும் கிளிகளை விரட்டச் சென்றாள் தலைவி. குளிர் என்னும் இசைக்கருவியால் இசைத்து ஒளி எழுப்பினாள். அங்கு வந்த கிளிகளோ குளிா் என்னும் இசைக்கு மயங்கின. தலைவியின் குரலைத் தம் இனத்தின் குரலே என்று எண்ணிய கிளகள் வேறிடம் செல்லாது அங்கேயே தங்கின. அதனால் வருந்திய தலைவி அழுதாள். இதையே இப்பாடலடிகள் சுட்டுகின்றன. ஆகவே இப்பாடலடிகளில் இசைக்கு கிளிகள் மயங்கியமை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

கொடிய மனம் கொண்ட கள்வா்களையும் மயக்கும் தன்மை இசைக்கு உண்டு என்பதை,

**ஆறலைக் கள்வா் படைவிட அருளின்**
**மருதலைப் பெயா்க்கும் மருவுஇன் பாலை (பொருநா்-21-22)**

என்றார் முடத்தாமக்கண்ணியார்.

புறவாழ்வில் போரில் இசை பெரும்பங்கு வகித்தது. போரின் தொடக்கத்தையும் முடிவையும் அறிவிப்பதே இசையாக இருந்தது. போரில் எந்த நாட்டு மன்னன் வெற்றி பெறுகிறான் என்பதைத் தெரியப்படுத்துவது இசையே ஆகும். வென்ற மன்னன் தோற்ற மன்னனின் முரசைக் கிழிப்பதை மரபாகக் கொண்டிருந்தான். போரில் முழங்கும் முரசு வீரா்களின் மனதில் ஊக்கத்தை அளிப்பதாக இருந்தது.

சான்றாக,

**பொதுவியல் தூங்கும் விசியுறு தண்ணும்மை**
**வளிபொரு தெண்கண் கேட்பின்**
**அதுபோா் என்னும் என்ஜயும் உளனே (புறம்-89-7-9)**

என்ற வரிகளின் மூலம் காற்றின் காரணமாக ஒலி எழுப்பியது தண்ணுமை. அவ்வொலி போரின் அறிவிப்பொலியே என்று ஐயம் கொண்ட வீரா்களின் நிலை இங்கு சுட்டப்பட்டுள்ளது. இதனால் இசை அக்காலத்தில் எந்த அளவுக்கு மனதில் ஊக்கத்தையும் சிந்தனையையும் தூண்டுவதாக அமைகிறது என்பதனை அறியமுடிகிறது.

**இசையும் மருத்துவத் தொடா்பும்**

இன்றைய நிலையில் இசையானது மருத்துவத்துறையோடு மிகப்பெரிய தொடா்பு கொண்டிருக்கிறது. அம்மைநோயால் தாக்கப்பட்ட ஒவனுடைய உடம்பானது அதிக எரிச்சலை

சந்திக்க நேரிடும். அப்போது மாரியம்மன் தாலாட்டுப் பாடி அவனை உறங்கச் செய்வது கிராமப் புறங்களில் சடங்காகும். பலர் அதனை ஒரு மூடநம்பிக்கை என்றாலும் அது முற்றிலும் உண்மையே. இசையோடு கலந்து பாடுவதன் மூலமாக உடம்பில் ஏற்பட்ட வலியை குறைக்கும் என்பது புலனாகும். இதனையே அன்றையகால சங்க இலக்கியங்களும் உணர்த்துகின்றன.
அதனை,

**தீம்கனி இரவமொடு வேம்பு மனை செரீ**
**வாங்கு மருப்பு யாழொடு பல்இயம் கறங்க**
**இசைமணியெறிந்து காஞ்சிபாடி (புறம்-281-1-5)**

என்ற பாடலில் போரில் புண்பட்ட வீரனின் புண்ணை ஆற்றவும் அவன் வலியின்றி இருக்கவும் காஞ்சிப்பண் பாடியமை சுட்டப்படுகிறது. இசை வலியை குறைக்கும் என்ற அறிவு அன்று முதல் இன்று வரை வாழும் மக்களுக்கு இருந்தமையை அறியலாம். இதனை மேலும் ஒரு சான்று வாயிலாகவும் அறிய முடியும்.

**கொடுவரி பரந்தெனக் கொழுநர் மார்பில்**
**நெடுவரிசி விழுப்புண் தணிமார்க் காப்பென**
**அறல்வாழ் கூந்தல் கொடிசியர் பாடல்" (மலைபடு-302-304)**

என்ற பாடலில் உடலில் ஏற்பட்ட வலி குறைய பழந்தமிழர்கள் இசையை மருந்தாகப் பயன்படுத்தியமை புலனாகிறது.

**மனஅழுத்தம் போக்கும் இசை**

மக்களின் மனஅழுத்தத்தையும் போக்கும் ஒரு மருந்தாகவே இசை விளங்குகிறது என்பதனை சங்கப்பாடல்கள் உணர்த்துகின்றன. குறமகளிர் தினை குற்றும்போது பாடும் பாடல் வள்ளைப்பாட்டு ஆகும் இதனை,

**தினைகுறு மகளிர் இசைபடு வள்ளை (மலைபடு-343)**
**பாவடி உரல பகுவாய் வள்ளை (குறுந்-89-1)**

ஆகிய அடிகள் உணர்த்தும். வள்ளைப்பாட்டு என்பது மகளிரின் மனஅழுத்தம் நீக்கும் ஒருவகையான இசை மருத்துவமாகவே அமைகிறது.

தலைவியின் உடல்வேறுபாடு கண்ட நிகழ்த்தப்படும் வெறியாட்டு ஒருவகை இசைமருத்துவமாகவே அன்று நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இதனை,

**கூடுகொள் இன்னியம் கறங்க**
**ஆடுஅணி அயர்ந்த அகன் பெரும்பந்தர்**
**வெண்போழ் கடம்பொடு சூடி இன்சீர்**
**ஐது அமை பாணிஇரீ, (அகம்-98-14-17)**

என்ற பாடல் வரிகளிலும்,

**அருங்கடி வேலன் முரகொடு வளைஇ**
**அரிக்கூட்டு இன்னியம் கறங்க (ம.காஞ்சி-611-612)**

என்ற பாடல் வரிகள் மூலமாகவும் வெறியாட்டில் இசை மையஆற்றலாக விளங்கியமை உணர்த்தப்படுகிறது. தன்னைப் பற்றி ஊரார் பேசும் அலரால் ஏற்பட்ட மனஅழுத்தமே தலைவியின் உடல் வேறுபாட்டுக்கு அடிப்படைக் காரணமாகும். இசை இந்த மனஅழுத்தத்தைப் போக்குவதாக அமைகிறது.

**முடிவுரை**

சங்க கால மக்கள் இசையின் பயனை நன்கு அறிந்திருந்தனர். அதனை தம் வாழ்வில் ஒரு கூறாகவே போற்றினர் என்பதற்கு சங்க இலக்கியங்களே சான்றாக உள்ளன. மனிதர்கள் மட்டுமன்றி விலங்கினங்கள், புள்ளினங்கள் கூட இசைக்கு மயங்கும் என்ற குறிப்புகள் வழி அக்கால மக்களின் இசை நுகர்ச்சியை அறியலாம் இசை நோயை குணப்படுத்தும், வலியைக் குறைக்கும் என்ற அவர்களின் சிந்தனை அவர்களின் இசை மருத்துவ அறிவை இசைக்கும் உயிரினங்களுக்கும் உள்ள தொடர்பை இக்கட்டுரை விளக்குகிறது.